கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 36/2023

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 சீதாலெட்சுமி என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.சா.1 – சீதாலெட்சுமி – முதல் விசாரணை தொடர்ச்சி**

1. கல்லடை கிராமம், புல எண்.154 ற்கான நிலபுல வரைபடம் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1**
2. கல்லடை கிராமத்தின் செட்டில்மென்ட் ஜாமாபந்தி சிட்டா சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2**
3. கல்லடை கிராம புல எண்.154 ற்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.3**

முதல் விசாரணை முடிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். நில கையகப்படுத்தப்பட்ட விவரங்கள் குறித்து எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் சரியாக தெரியாது. இவ்வழக்கில் காண்பிக்கப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். புல எண்.154/15 ஆகும். தாவா சொத்தான புல எண்.154/20 ன் எவ்வளவு விஸ்தீரனத்திற்கு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. புல எண்.154/20 அரசாங்க சாலையாக உள்ளது.

2. வா.சா.ஆ.7 ஆவணம் பட்டா எண்.1049 ல் யார் யார் பெயர் உள்ளது என்றால் கருப்பண்ண கவுண்டர் மனைவி ராமாயி மற்றும் சிங்காரம் மனைவி தனலெட்சுமி ஆகியோர் பெயர் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.7 பட்டாவில் எவ்வளவு விஸ்தீரனம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் புல எண்.154/15 ல் ஹெ 0.12.0 ஏர்ஸ் காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.10 ல் UDR க்கு முன்பு புல எண்.154/15 ல் 36 சென்ட் நிலம் இருந்தது என்றும், UDR க்கு பின்பு புல எண்.154/15 ஆனது, புல எண்.154/20 உட்பிரிவாகி சுமார் 6 சென்ட் நிலமானது சாலையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக வா.சா.ஆ.10 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது.

3. ரோடு எந்த திசையில் செல்கிறது என்றால் தென்வடலாக செல்கிறது.

மேற்படி ரோடானது தேசிய நெடுஞ்சாலையா, மாநில நெடுஞ்சாலையா அல்லது கிராமபுற சாலையா என்றால் கிராமபுற சாலையாகும். மேற்படி சாலை எந்த ஊருக்கு செல்கிறது என்றால் திருச்சி முதல் தோகைமலை செல்லும் ரோட்டில் வடக்கே பிரிந்து நெல்லூர்பட்டி, அலங்காம்பட்டி ஆகீய ஊருகளுக்கு செல்லும் சாலையில் இணைகிறது. மேற்படி சாலை போட்டு எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் தற்சமயம் தான் போடப்பட்டது. UDR க்கு முன்பு மேற்படி சாலையானது இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி சாலையை விரிவாக்கம் செய்ய என்ன அவசியம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண்.154/15 ல் மொத்தம் 36 சென்ட் நிலமானது வாதியின் தாயாரால் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 36 சென்ட் இடத்தில் ரோட்டிற்கு இடம் தேவைப்படுவதாக வாதிக்கு அரசு அதிகாரிகளால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி நிலம் கையகப்படுத்த வேண்டி அரசாணை எதுவும் பிறப்பிக்கப்பட்டதா என்றால சரியாக தெரியாது. பஞ்சாயத்து அலுவலர்களை தான் கேட்க வேண்டும். மேற்படி 36 சென்ட் நிலத்திலிருந்து 6 சென்ட் நிலத்தை அரசாங்க சாலையாக கையகப்படுத்தியதற்கு வாதிக்கு இழப்பீடு எதுவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது.

5. பொதுவாக சந்தை மதிப்பானது பட்டா நிலங்களுக்கு மட்டுமே நிர்ணயம் செய்யப்படும் என்றும், அரசாங்க நிலங்களான பாதை மற்றும் புறம்போக்கு நிலங்களுக்கு சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் நிலபுல வரைபடத்தில் புல எண்.154/15 என்ற நிலத்தை உட்பிரிவு செய்து புல எண்.154/20 என பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண்.154/20 ஆனது கிராம கணக்கில் அரசாங்க சாலையாக உள்ளது. மேற்படி புல ண்.154/20 நிலமானது ரோடாக உள்ளதா அல்லது நிலங்களோடு தனியாக உள்ளதா என்றால் அளவீடு செய்து பார்த்தால் தான் தெரியும். வா.சா.ஆ.11 சந்தை மதிப்பீட்டு விவரத்தில் சர்வே எண்.154/19 மற்றும் சர்வே எண்.154/21 ஆகிய நிலங்களுக்கு மட்ம் சந்தை மதிப்பீடு செய்யப்பட்டு மேற்படி இரு புல எண்களுக்கும் நடுவே உள்ள சர்வே எண்.154/20 என்ற நிலத்தை மட்டும் அரசு நிலமாக காண்பித்து சந்தை மதிப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி புல எண்.154/19 மற்றும் 154/21 ஆகிய நிலங்கள் பட்டா நிலமாக

காண்பித்து, மேற்படி இரு புல எண்களுக்கு இடையே உள்ள புல எண்.154/20 நிலத்தை மட்டும் எவ்வகையில் அரசாங்க சாலையாக வகைபாடு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.8 ல் வாதி மேற்படி நிலம் வகைபாடு சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியருக்கு மனு செய்து அதன் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் வட்டாட்சியருக்கு விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அனுப்பிய நில அளவையர் மூலம் பரப்பை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க கோரிய உத்தரவானது பெறப்பட்டுள்ளதாக வாதிக்கு தகவல் அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான்.

7. கணினி அ பதிவேட்டில் ராமாயி மற்றும் தனலெட்சுமி ஆகிய இருவரும் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கிராம அ பதிவேட்டில் ராமாயி பெயர் உள்ளது. தற்கால கணினி அ பதிவேட்டில் ராமாயி மற்றும் தனலெட்சுமி ஆகியோர் பெயர் உள்ளது. கணினி அ பதிவேட்டில் பட்டாவில் உள்ள நபர்கள் பெயர் தான் காண்பிக்கப்படும். என்னிடம் காட்டப்படும் புல எண்.154/15 ற்கான கிராம அ பதிவேட்டின் கணினி பதிவிறக்க நகலில் ராமாயி மற்றும் தனலெட்சுமி ஆகியோர் பெயர்கள் உள்ளது என்றால சரிதான். **மேற்படி புல எண்.154/15 ற்கான கிராம அ பதிவேட்டின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா சொத்தாகிய புல எண்.154/15 ல் உள்ள 36 சென்ட் நிலமானது வாதியின் தாயாராகிய ராமாயிக்கு பாத்தியப்பட்டு அவரது பெயரில் பட்டா ஏற்பட்ட நிலம் என்றால் சரியல்ல.

8. மேற்படி சர்வே எண்.154/15 ல் உள்ள 36 சென்ட் நிலமானது வாதிக்கு பாத்தியப்பட்டதாகும் என்றால் சரியல்ல. மேற்படி வாதிக்கு பாத்தியப்பட்ட புல எண்.154/15 ல் உள்ள 36 சென்ட் நிலத்தில் 6 சென்ட் நிலத்தை எவ்வித தகவலும் வாதிக்கு அறிவிக்காமலும் அரசாங்கத்தால் தவறாக கையகப்படுத்தப்பட்டு வாதிக்கு எவ்வித இழப்பீடு வழங்காமல் புல எண்.154/20 என அரசாங்க சாலையாக உட்பிரிவு செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 6 சென்ட் நிலத்தை புல எண்.154/20 என எவ்வித அறிவிப்பும் அனுப்பாமல் உட்பிரிவு செய்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

9. மேற்படி 6 சென்ட் நிலத்தை புல எண்.154/20 என உட்பிரிவு செய்தது தேசிய நெடுஞ்சாலை இல்லை என்றும், மாநில நெடுஞ்சாலையும் இல்லை என்றும், அது கிராமபுற சாலை மட்டுமே என்றும், மேற்படி இடத்தில் ஏற்கனவே போதுமான கிராமபுற சாலை இருந்தது என்றும், எவ்வித அறிவிப்பும் வாதிக்கு

அனுப்பாமல் வாதிக்கு பாத்தியப்பட்ட 6 சென்ட் நிலத்தையும் சேர்த்து கிராமபுற சாலையாக சேர்த்து தவறாக உட்பிரிவு செய்து வகைபாடு செய்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு மற்றும் தெற்கில் உள்ள நிலங்களை புன்செய் நிலமாக குறிப்பிட்டு சந்தை மதிப்பீடு செய்யப்பட்டு, மேற்படி நிலங்களுக்கு நடுவே உள்ள தாவா சொத்தை மட்டும் கிராமபுற சாலையாக காண்பித்து சந்தை மதிப்பீடு செய்யாமல் இருப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து வாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றும், அதில் 6 சென்ட் நிலத்தை கிராமபுற சாலையாக தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண்.154/20 என வாதிக்கு பாத்தியப்பட்ட 6 சென்ட் நிலத்தை தவறாக அரசாங்க சாலையெ வருவாய் துறை ஆவணங்களில் எவ்வித அரசாங்க ஆணையும் பிறப்பிக்காமல் உட்பிரிவு செய்தது தவறு என்றால் சரியல்ல. அரசு அலவலகங்களில் பராமரிக்கப்படும் தவறான ஆவணங்களை வைத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**